MADURAI BENCH OF MADRAS HIGH COURT (watermark)

**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி.**

**OS No.53/2019**

முன்னிலை – எஸ். கோபிநாதன், பி.எஸ்சி.பி.எல்.,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி, திருச்சிராப்பள்ளி.

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 08 ஆம் நாள் புதன்கிழமை வாதி தரப்பில் முதலாவது சாட்சியின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டு 54 விதியின் 9 வது பிரிவின் ஏற்பாட்டின்படி) நீதிபதியால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு.முகமது காசிம் | தந்தை பெயர் | : திரு.முகமது யூசுப் |
| ஜாதி | : | கிராமம் | : |
| வட்டம் | : | மதம் | : |
| தொழில் | : | வயது | : |

நாள் : 08.10.2025

**P.W. : 1**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :**

| | |
|---|---|
| கேள்வி | தாவா சொத்து விவரத்தை கிழமேல் மற்றும் தென்வடல் அளவுகள் கொடுக்கப்படவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | வா.சா.ஆ.1, 2, 3 மற்றும் 5 ஆகிய ஆவணங்களில் சர்வே நம்பர் குறிப்பிடப்படவில்லை என்றால்? |
| பதில் | எனக்கு படிக்க தெரியாது. |
| கேள்வி | நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அசல் உங்கள் வசம் உள்ளதா? |
| பதில் | எனது வழக்கறிஞரிடம் உள்ளது. |
| கேள்வி | நீங்கள் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் எதுவும் தாவா சொத்துக்கு சம்பந்தம் இல்லை என்றால்? |

| | |
|---|---|
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | தாவா சொத்து வரி விதிப்பு உங்கள் பெயரில் இல்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | தாவா சொத்து எத்தனை நபர்கள் பெயரில் வரி விதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்றால்? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | தாவா சொத்தில் எத்தனை நபர்கள் இருக்கிறார்கள் என்று உங்களுக்கு தெரியாது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | தாவா சொத்தில் இருப்பவர்களின் ஒவ்வொருவரின் இடங்களின் நான்கு எல்லைகள் தெரியாது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | தாவா சொத்தில் இருப்பவர்கள் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேல் இருக்கிறார்கள் என்றால்? |
| பதில் | இல்லை. 5 வருடங்களாக இருக்கிறார்கள். |
| கேள்வி | தாவா சொத்து யாரால் வாங்கப்பட்டது? |
| பதில் | எனது முன்னோர் ஹாஜிமுகமது இப்ராஹிம் அவர்களால் வாங்கப்பட்டது. |
| கேள்வி | அவர்களின் இறப்பு மற்றும் வாரிசு சான்றிதழ்களை நீங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | ஹாஜி முகமது இப்ராஹிம் என்பவருக்கும், உங்களுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை என்றால்? |
| பதில் | அவர் என்னுடைய அப்பாவின் தாத்தா. |
| கேள்வி | கொடி வழி ஜாபிதா உங்களால் தாக்கல் செய்ய முடியுமா? |
| பதில் | இவ்வழக்கில் நான் தாக்கல் செய்த ஆவணங்கள்தான். வேறு எதுவும் இல்லை. |
| கேள்வி | நீங்கள் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணத்தில் கதவு எண் குறிப்பிடப்படவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த ஆவணங்களில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லைகளும், தாவா |

| | |
|---|---|
| | சொத்தின் நான்கெல்லைகளும் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது என்றால்? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | வா.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் தாவா சொத்து எந்த ஆவணத்தில் கட்டுப்பட்டுள்ளது என்றால்? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | நீங்கள் எத்தனை பேர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளீர்கள்? |
| பதில் | 9 நபர்கள். |
| கேள்வி | மாநகராட்சி ஆவணங்கள் எதுவும் தாவா சொத்து சம்பந்தமாக உங்கள் பெயரில் இருக்கிறதா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | அரசாங்கத்தில் தாவா சொத்து சம்பந்தமாக எந்த உத்தரவும் செய்யவில்லை என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அரசு ஆவணங்களில் தாவா சொத்து அரசு புறம்போக்கு என்றுதான் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | நீங்கள் தனிப்பட்ட முறையில் தாவா சொத்து சம்பந்தமாக பத்திரம் வழங்க மனு கொடுத்துள்ளீர்களா? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | 3, 4 பிரதிவாதி தாவா சொத்தில் 1925 முதல் இருக்கிறார்கள் என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | தாவா சொத்து இருக்கும் இடம் ஆஸ்பத்திரி ரோடு என்று சொல்வார்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 3, 4 பிரதிவாதிகள் தாவா சொத்து பூர்வீகமாக இருந்து வருகிறார்கள் என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | தாவா சொத்து கதவு எண்.43 என்று சொன்னபோது அது உங்கள் பெயரில் இல்லை என்றால்? |

MADURAI COURT, TRICHY

| | |
|---|---|
| பதில் | சரிதான். |
| கேள்வி | கதவு எண்.43 சொத்து இருக்கிறதா, இல்லையா? |
| பதில் | அதனை விற்று ஆயிற்று. |

**வழக்கறிஞர் கால அவகாசம் கேட்டு கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த வெளி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நேரடியாக என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சிக்கு படித்து காட்டி அவர் சரியென்று ஒப்புக்கொண்ட பின் இன்று 08.10.2025 என் முன்பு கையெழுத்து செய்தார்.

Sd/.Thiru.S.Gopinathan,

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,

திருச்சிராப்பள்ளி.

தேதி: 08.10.2025

II ADJ COURT, TRICHY